★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 85630

நம் நாடு

தி. மு. கழகத்தின் இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 9உ திங்கள் (24—9—56) ★ ★ வெளியூர் : புரட்டாசி 10உ செவ்வாய் (25—9—56) [இதழ் 90

இலட்சணமே இலட்சணம்!

இராமநாதபுரம், செப் 20—

"இலங்கையிலிருந்து விரட்டப்பட்டு தமிழகத்திற்கு வந்துள்ள மக்கள் ஒன்று சேர்ந்து குடிசைக் கைத்தொழில் ஏதாவது தொடங்கினால், அவர்களுக்கு சென்னை அரசாங்கம் ஆதரவு அளிக்கும்"

என்று சென்னை அரசாங்க மராமத்து இலாகா அமைச்சர் இராமநாதபுரம் இராசா அவர்கள், புதுமடம் கிராமத்தார் அளித்த வரவேற்பிற்கு பதில் அளிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

செயல் வீரர் சாமி வீரச் சாவை அணைத்துக் கொண்டார்

பெரியோர்கள் காட்டிய புகழ்ப் பாதையில் போய்விட்டார்

விடுதலை இயக்கம் தந்து தீர வேண்டிய காணிக்கை

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கடமையாற்றுவோம்

கே. வி. கே. சாமி சவ அடக்கத்தில் பொதுச்செயலாளர் இறுதி வணக்கவுரை

"பெரியோர்களே! தாய்மார்களே! தோழர்களே! பதினாயிரக் கணக்கிலே இந்தப் பரந்தவெளியில் கூடியிருக்கிற நாம் அனைவரும் மிக்க வேதனையிலும், வருத்தத்திலும், துக்கத்திலும், துயரத்திலும் மூழ்கிக்கிடக்கிறோம் தூத்துக்குடி நகரமே இன்று துக்கக்கோலம் பூண்டு சீரிழந்து, சிறப்பிழந்து, சுறுசுறுப்பற்று, செயலற்றுக் கிடக்கிறது நேற்று இந்நேரம் தூத்துக்குடி மாநகரின் வீதிகளிலே மாவீரராக நடமாடிக் கொண்டிருந்த நம் ஆருயிர் நண்பர் தோழர் கே. வி கே சாமி அவர்கள், இதோ—இப்பொழுது நம்முன் பேச்சுமூச்சற்று மீளா உறக்கத்திலே சாய்ந்துகிடக்கிறார்.

"தோழர் சாமி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்—இல்லை இல்லை—நம்மை விட்டுப் பிரிக்கப்பட்டுவிட்டார். தோழர் கே வி. கே சாமி அவர்களின் பெயரும், புகழும், செல்வாக்கும் நாளுக்கு நாள் வளர்ந்தோங்கிப் பொதுமக்களின் பேரன்பையும், பேராதரவையும் பெருமளவில் பெற்றுவருவதைக் காணச் சகிக்காத பொறாமை உள்ளங்கொண்ட கயவர்கள்—கருத்து வேற்றுமையை விவாதித்துத் தீர்த்துக்கொள்ளத் திறனற்று வாள்முனையால் தீர்த்துக்கொள்ள முயலும் இழிமக்கள்—அரசியல் நாகரிகம் தெரியாத அறிவிலிகள்—பண்பாடு அறியாத பதர்கள்—கொள்கை வழிநடக்கத் தெரியாத கோழைகள்—மனித உருவிலே நடமாடும் மிருக உணர்ச்சிகொண்டோர் தோழர் சாமி அவர்களைக் கொன்று போட்டுவிட்டார்கள். எந்த உருவான செயலையும் நிறைவேற்றத் தெரியாத—கையாலாகாத கோழைகள், அவரது உயிரை வவ்வி ஓடிவிட்டனர். தோழர் சாமி அவர்கள் வீரச் சாவை அணைத்துக்கொண்டு விட்டார்—புகழுலகு எய்திவிட்டார்.

"தோழர் சாமி அவர்களின் இழப்பு நமக்கெல்லாம் பெரும் அதிர்ச்சியையும், திகைப்பையும் தருகிறது. அவரது கல்லறையின் முன்னே அவரது சடலத்தை ஏந்திக்கொண்டு கண்ணீரும், கம்பலையுமாக நிற்கிறோம். தோழர் சாமியின் பிரிவால் திராவிடம் நல்லதொரு குடிமகனை இழந்தது; தமிழகம் ஒரு சிறந்த தமிழ் மகனை இழந்தது; பாண்டியமண்டலம் ஒரு மாவீரனை இழந்தது; தூத்துக்குடி ஒரு பொதுநல ஊழியரை இழந்தது; திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு செயலாற்றும் செம்மலை இழந்தது; தொழிலாளர் சமூகம் ஒரு நல்ல தலைவரை இழந்தது; பல்வேறு கட்சிகளையும் சார்ந்தவர்கள் பண்பாடமைந்த ஒரு நண்பரை இழந்தார்கள்; நான் ஒரு சகோதரனை இழந்தேன். நாம் ஒருவருக்கொருவர் ஆறுதல் கூறிக் கொள்ளவே இங்கே கூடியிருக்கிறோம்.

"தோழர் சாமி அவர்கள் இப்பொழுது வாய் திறந்து பேச முடியாத நிலையிலிருந்தாலும் அவரது பிணம் சிலபல படிப்

(4-ம் பக்கம் பார்க்க)

தூத்துக்குடிக்கு அண்ணா

துணைப் பொதுச்செயலாளர் என்.வி. நடராசன் வருகை

★

அண்ணா அவர்கள் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுடன் 30—9—56 அன்று தூத்துக்குடிக்கு வருவதுடன் அன்று மாலை நடைபெறவிருக்கும் அனுதாபக் கூட்டத்திலும் கலந்து கொள்வார்கள்.

எல்லைக்குழு அமைக்கக்கோரி சட்டசபை முன் கிளர்ச்சி

கே. விநாயகம் உள்ளிட்ட 100 பேர் கைதாயினர்

சென்னை, செப். 24—

ஆந்திரம் - தமிழகத்தின் எல்லையை நிர்ணயிக்கக் குழு ஒன்றை அமைக்குமாறு வடக்கு எல்லைப் பாதுகாப்புக் குழுவினர் இந்திய அரசியலாரை வற்புறுத்தி வந்ததைப் புறக்கணித்திருப்பதை எதிர்த்தும், அக்கோரிக்கையை சென்னை அரசியலார், இந்திய சர்க்காரிடம் வற்புறுத்தி 15 நாட்களுக்குள் குழு அமைக்குமாறு செய்ய வேண்டுமென்பதை நினைவூட்டவும், வடக்கெல்லைப் பாதுகாப்புக் குழு, ஏற்கனவே அறிவித்திருந்தபடி இன்று காலை 9-மணியளவில் சென்னை சட்டசபை முன், கோரிக்கைகளை வலியுறுத்தும் வாக்கியங்களை முழங்கிக்கொண்டு, தோழர் கே. விநாயகம், எம். எல். ஏ., அவர்கள் தலைமையிலும் பொதட்டூர்பேட்டை தியாகராசன் அவர்கள் தலைமையிலும் இரு பிரிவாக 100 தொண்டர்கள் அமைதிகரமான கிளர்ச்சி செய்தனர்.

இவர்களைப் போலீசார் சட்டசபை வாயிலுக்குள் நுழையாதபடி தடுத்து கைது செய்து மண்டபத்திற்கு வெளியேயுள்ள சாலையில் தயாராக நிறுத்திவைக்கப்பட்டிருந்த போலீஸ் வானில் ஏற்றிக் கமிஷனர் ஆபீசுக்குக் கொண்டு போயிருப்பதாகவும், இத்துடன் இன்றையக் கிளர்ச்சி முடிந்திருப்பதாகவும், தொடர்ந்து நாளை நடைபெறுமென்றும் நம் அலுவலகத்திலிருந்து 12-30 மணிக்குக் கேட்ட விவரங்களுக்கு, தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானம் அவர்கள் டெலிபோன் மூலம் இவ்விவரங்களைக் கூறினார்.

15 மாவட்டங்களில் 144 தடையுத்தரவு

இலட்சுமணபுரி, செப். 22—

'மதத் தலைவர்கள்' என்ற புத்தகத்திற்கு எதிராகக் கிளர்ச்சிகள் நடைபெறுவதைத் தடுப்பதற்காக உத்திர பிரதேசத்தைச் சேர்ந்த 15 மாவட்டங்களில் கி.பு.கோ. 144-வது பிரிவுப்படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

சூயஸ் தகராறு

ஐ. நா. சபைக்கு போகிறது

சூயஸ் கால்வாய் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஐ. நா. பாதுகாப்பு சபை கூடவேண்டும் என்று அதன் தலைவருக்கு பிரிட்டனும், பிரான்சும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன. 26-ந் தேதியன்று கூட்டம் நடைபெறும்; அதற்கு அடுத்த கூட்டத்திற்கு எகிப்து அழைக்கப்படுமாம்.

அமெரிக்கா ஒப்புதல்?

சூயஸ் தகராறை ஐ. நா. சபைக்குக் கொண்டுபோவதை அமெரிக்கா அங்கீகரிப்பதாகக் கூறப்படுகிறது.

அரபு அதிபர்களுடன் நாசர் ஆலோசனை

சிரியா ஜனாதிபதியுடனும், சவூதி அரேபிய மன்னருடனும் எகிப்திய தலைவர் நாசர் சூயஸ் நிலைமை பற்றி இரகசியமாக ஆலோசனை நடத்தியுள்ளார். மீண்டும் அவர்கள் சூயஸ் விஷயமாகக் கலந்து பேசுவார்கள் என்றும், பண்டித நேரு தம்மாமுர்க்கு வருவதாகவும், நாசர் நேருவுடன் கலந்து பேசுவாரா என்பது உறுதியாகவில்லை என்றும் கூறப்படுகிறது.

சென்னையில் 30—9—56 அன்று அனுதாபக் கூட்டம்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

மற்றும் பல தோழர்களும் கலந்துகொள்வர்

30—9—56 அன்று சென்னை நகரில், தலைமைக் கழகச் சார்பில் நடைபெறவிருக்கும் அனுதாபக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மற்றும் பலரும் கலந்து கொள்வர்.

கே. வி. கே. சாமி பிரிவு

செப்டம்பர் 30: அனுதாப நாள்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

திராவிட முன்னேற்றக் கழகச் செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளரும், பல்வேறு தொழிற்சங்கங்களின் தலைவரும், தூத்துக்குடி நகராண்மைக் கழக உறுப்பினருமான தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் படுகொலை செய்யப்பட்டு, நம்மைவிட்டுப் பிரிந்தமைக்கு அனுதாபம் தெரிவிக்கவும், நமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளவும் செப். 30. ஞாயிறன்று நாடெங்கும் அனுதாபக் கூட்டங்களை நடத்துமாறு திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளை வேண்டிக்கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
24—9—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

பயனற்ற வேலைக்கு பாழானது எவ்வளவு?

புதுடில்லி, செப். 22—

இந்திய மார்க்கெட்டில் 'சூரிய அடுப்பு'களின் விற்பனை போதிய அளவுக்கு திருப்திகரமாக இல்லாததால், இதை மேலும் பிரபலப்படுத்தும் யோசனையை இந்திய அரசாங்கம் கைவிட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

டாக்டர் அம்பேத்கார் புத்த மதத்தில் சேருகிறார்

டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அக். 14-ந் தேதியன்று நாகபுரியில் புத்த மதத்தில் சேருவார் என்றும், புத்த பிட்சுக்கள் இந்த மத மாற்றச் சடங்கை நடத்தி வைப்பார்கள் என்றும் தெரியவருகிறது.

விற்பனை வரியை ஒழுங்குபடுத்த சட்டம்

மாநிலங்களுக்கிடையே நடைபெறும் வர்த்தகத்திற்கு விற்பனை வரி விதிப்பை ஒழுங்குபடுத்த இந்திய அரசாங்கம் சட்டமியற்றும் என்று தெரிகிறது.

தென்னாடு

சென்னை 24–9–’56 திங்கள்

நிதி மந்திரி பதிலளிப்பாரா?

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இந்தியத் துணைக் கண்டம்முழுவதிலும் 7,000கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டிருப்பதாகவும், அதில் 3,500 தமிழ்நாட்டுக் கிராமங்களுக்கு அவ்வசதி கிடைத்திருப்பதாகவும் எடுத்துக் காட்டிவிட்டு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறது எனப் பரவலாகக் கூறப்பட்டு வரும் குற்றச்சாட்டு வெறும் பொய்யாகும் என நிதி அமைச்சர் கூறியுள்ளார். அவர் வாதத்திலுள்ள பொய்மையை நேற்று முன்தினம் சுருக்கமாக எடுத்துக்காட்டி இருந்தோம். இன்னும், மேலும் சில அதுபற்றியே தொடர்ந்து கூறுகிறோம்.

பெற்றுள்ள மின்சார வசதியை ஒரு கிராமம், எத்துறையில், எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதைக் கொண்டுதான், அக்கிராமத்திற்கு மின்சார வசதி கிடைத்ததால் உண்டாகக்கூடிய விளைவுகளை நிர்ணயிக்க முடியும்; அத்தகைய நிர்ணயிப்புத்தான் மின்சாரத் துறையின் சிறப்பு என முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

மின்சார வசதி பயன்படுத்தப்பட்டுவரும் துறைகளைக் கொண்டு பார்க்குமிடத்து, தமிழ்நாட்டில் அதிகப்படியான கிராமங்கள் மின்சாரவசதியைப் பெற்றிருக்கின்றன எனப் பெருமை அடித்துக்கொள்ளும் ஒன்றைத் தவிர்த்து, வேறு எதற்கும் அது பயன்படுவதாக இல்லை என்ற உண்மையையும் முன்னர் விளக்கமாக்கி இருந்தோம்.

அதே நேரத்தில், தமிழ்நாட்டைவிடக் குறைந்த கிராமங்களே மின்சார வசதியைப் பெற்றிருந்தபோதிலும், அது வெறும் ‘வெளிச்சம்’ போடுவதற்கு மட்டுமே பயன்படுத்தப்படாமல், தொழில் துறைக்குப் பயன்படுத்தப்பட்டுச் செல்வப் பெருக்கத்திற்கும், பணி புரியும் வாய்ப்பினைப் பெருக்குவதற்கும்,வாழ்க்கைத்தரத்தைக் கூட்டுவதற்கும் வகை செய்யப்படுகின்றன வடநாட்டில் என்ற பேருண்மையையும் ஏற்கனவே எடுத்துக்காட்டியிருந்தோம்.

மின்சாரத்தைப் பயன்படுத்தும் மேற்குறிப்பிட்ட இரண்டு முறைகளையும் விளக்கிக்காட்டி, வடநாட்டைவிடத் தமிழ் நாட்டில் மிகுதியான கிராமங்கள் மின்சார வசதியினைப் பெற்றிருக்கின்றன எனக் கூறுவது, வெறும் சொல்லலங்காரப் பேச்சேயாகும்; அதனால், தொழில்துறையில் தென்னாடு முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வேண்டுமென்றே டில்லி ஏகாதிபத்தியத்தால் அலட்சியப்படுத்தப்பட்டு இருக்கிறது என்ற கணிசமான குற்றச்சாட்டை மறைத்துவிட மேற்கொள்ளும் நிதி அமைச்சரின் முயற்சி வெற்றி பெறாது எனவும் இடித்துக் கூறி இருந்தோம். இந்த,

பொதுவாகத் தென்னாட்டில், குறிப்பாக தமிழகத்தில் இருந்து வரும் கனிப்பொருள்களைப் பயன்படுத்துவதற்கேற்ற தொழில்களைத் துவங்க வேண்டும் என்ற கோரிக்கையை, இந்தியத் துணைக்கண்டம் அரசியல் சுதந்திரம் பெற்ற நாள்தொட்டு நாம் வெளியிட்டு வந்திருக்கின்றோம். அதேபோன்று, காங்கிரஸ் கட்சியினரும் அக்கோரிக்கையை வற்புறுத்தி வருகின்றனர்.

இதற்கு எடுத்துக் காட்டாக, சேலம் மாவட்டத்தில் மண்ணுக்குள் மங்கிக் கிடக்கும் இரும்பைத் தோண்டி எடுத்து உருக்கு இரும்பாக மாற்றுவதற்கும், பயன்படு சிறப்புப் பொருட்களாக ஆக்குவதற்கும் அப்பகுதியில் உருக்கு தொழிற்சாலை ஒன்று துவங்கப்பட வேண்டும் என, தக்கப் புள்ளி விவரங்களுடன் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களே டில்லியைத் தீவிரமாக வற்புறுத்தி வந்திருப்பதைக் குறிப்பிடலாம்.

இக்கோரிக்கைக்கு டில்லி காங்கிரஸ் ஆட்சிபீடம் கூறி வந்த பதில் என்ன?

உருக்குத் தொழிற்சாலைக்கு இன்றியமையாத் தேவையாக இருப்பது மின்சாரம்—நிலக்கரி ஆகிய இரண்டு சாதனங்களாகும். அந்த இரண்டு சாதனங்களும் தென்னாட்டில் இருக்கவில்லை. எனவே சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்கக் கோருவது வெறும் பகல்கனவாகும் என டில்லி ஏகாதிபத்தியத்தின் சார்பில் பலமுறை பதில் தரப்பட்டு வந்திருக்கிறது.

நிலக்கரி, மின்சாரம் ஆகிய இரண்டின் உதவி இல்லாமல் தான், கிடைக்கும் காட்டுக் கரியைக் கொண்டு மைசூரில் உருக்குத் தொழிற்சாலை துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது என்ற உண்மையைச் சுட்டிக்காட்டி, சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையைத்துவங்க முடியாது என டில்லியின் சார்பில் கொக்கரித்த இரும்பு உருக்கு மந்திரியான கிருஷ்ணமாச்சாரியாரின் சொத்தை வாதத்திற்கு சம்மட்டி அடிதரப்பட்டது. இருந்தாலும் அந்த அமைச்சர் தனது பிடிவாதத்தைத் தளர்த்திக் கொள்ள முன்வரவில்லை; டில்லியும் தனது கொள்கையை மாற்றிக் கொள்ளவில்லை.

நெய்வேலி பழுப்பு நிலக்கரிக்கும் சேலத்து இரும்புக்கும் முடிபோட்டு உருக்கு மந்திரி பின்னர் பேசக் கிளம்பினர். நெய்வேலி திட்டம் வெற்றி பெறுவதைப் பொறுத்து இருக்கிறது சேலத்தில் உருக்குத் தொழிற்சாலை துவங்கப்படுவதும் துவங்கப்படாததும் என்று, தமது கூற்றுக்கு விளக்கம் தந்தார் அதே அமைச்சர்.

நெய்வேலியில் கிடைக்கும் பழுப்பு நிலக்கரியில் எந்த அளவு கூடுதலாக எரிபொருள் அடங்கி இருக்கிறதோ, அதைக் கொண்டுதான் சேலம் இரும்பைப் பயன்படுத்துவதற்கான தொழில் திட்டம் பற்றி சிந்திக்க முடியும் என்றும் அதே மந்திரியார், தமது மாறுமனத்தைக் காட்டிக்கொண்டார்.

போதுமான மின்சார வசதி இருந்திருக்குமானால் சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்குவதற்குரிய தடை ஏதும் இல்லை, என்பது மற்றொரு வாதம்.

இருப்பதைவிடக் கூடுதலான மின்சார உற்பத்திப் பெருக்கத்திற்குத் தேவைப்படும் நீர்த்துறைகளும், நிலக்கரிச் சாதனமும் இல்லையே என்ற காரணத்தைக் கூறி, மேற்குறிப்பிட்ட வாதத்திற்கு ஆதாரம் காட்டப்பட்டது.

டில்லி காட்டிய அவ்வாதாரத்தைப் பற்றிக்கொண்டு விடாது சளசளென சென்னை நிதி அமைச்சர் போன்றோரும் முகாரி பாடிவந்தனர். பொதுமக்களும் மெய்யென நம்பும் அளவிற்கு அதையே திரும்பத் திரும்பப் பாடிவந்தனர்.

மின்சாரம் போதுமான அளவு கிடைக்கப் பெறுததால் சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்க முடியவில்லை என்பது டில்லியின் வாதம்.

அதே பிடிவாதத்தைத் திரும்பத் திரும்ப உச்சரித்து வந்தார் நமது நிதி அமைச்சரும்!

அதே நிதிஅமைச்சர் இன்று கூறுகிறார், முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் தமிழ் நாட்டில் மட்டும் மின்சார வசதி பெற்றுள்ள கிராமங்கள் 3,500 ஆகும் என்று.

3,500 கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யும் அளவிற்குத் தமிழ்நாட்டில் மின்சாரப் பெருக்கம் இப்பொழுது ஏற்பட்டு இருக்கிறது என்பது நிதிஅமைச்சர் பேச்சின் உள்ளடக்கம்.

முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏற்பட்டிருக்கிறது இம்மின்சாரப் பெருக்கம் என்பது நிதி அமைச்சரின் வாக்கு.

இந்த ஐந்தாண்டுக் காலத்தில் பெருகியுள்ள மின்சாரத்தை, 3,500 கிராமங்களுக்கு வெளிச்சமிடப் பயன்படுத்தியதைக் காட்டிலும், சேலத்து இரும்பைத் தோண்டி எடுத்துத் தொழில்படுத்தும் உருக்குத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்திஇருக்கக்கூடாதா என்ற வினா, எவர் உள்ளத்திலும் எழத்தான் செய்யும்.

3,500 கிராமங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுவரும் மின்சாரத்தில் சரிபாதியைக் கொண்டே சேலம் உருக்குத் தொழிற்சாலையைத் துவங்கி இருக்க முடியும் என்ற கருத்து, ஆராய்ந்து முடிவு கட்டத்தக்கது.

உருக்குத் தொழிற்சாலை வேண்டாம்; அதற்காக மின்சாரத்தைச் செலவிடவும் வேண்டாம்; 3,500 கிராமங்களுக்கு வெளிச்சமிட்டால் மட்டும போதும் என்ற முடிவிற்கு நிதிஅமைச்சர் வந்துவிட்டாரா? அத்தகு முடிவிற்கு நிதிஅமைச்சர் ஏன்வந்தார்? ஏது காரணம் அம்முடிவிற்கு?

நிதிஅமைச்சர் பதில் தந்தாக வேண்டும். அந்த நியாயமான வினாவிற்குப் பதில் தருவாரா? அவர், தம் முத்தான வாய் திறந்து பதிலளிப்பாரா?

பிறப்பு அதிகம் - இறப்பு குறைவு!

புதுடில்லி, செப். 21—

தென் கிழக்கு ஆசியாவில் மக்கள் சுகாதார நிலைமை பற்றி உலக சுகாதார அமைப்பு ஒரு அறிக்கை விடுத்துள்ளது.

பிறப்பு உயர்ந்திருப்பதாகவும், இறப்பு குறைந்திருப்பதாகவும், குழந்தைகளின் மரண விகிதத்தில் மாறுதல் ஏதும் காணப்படவில்லை என்றும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிறிய பிரச்சினைக்காகத் தமிழர்கள் மனம் குழம்ப வேண்டாமாம்!

நிர்வாகத் துறையில் தமிழ் மொழிக்கும் உரிய முக்கியத்துவம் தரப்படுமாம்

‘பெருமிதம்’ பேசுகிறார் பிரதமர் பண்டாரநாயகா

கொழும்பு, செப். 21—

“இலங்கையின் அரசாங்க மொழியாகச் சிங்களம் மட்டுமே ஆக்கப்பட்டிருந்தாலும், சர்க்கார் நிர்வாகத் துறைகளில் தமிழுக்கும் கொடுக்கப்படவேண்டிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு உபயோகிக்கப்படும்”

என்று, இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா, இலங்கை தமிழ் மொழிப் பிரச்சினை—சிறுபான்மையினர் உரிமை குறித்துத் தமது முன்னைய கூற்றையே மீண்டும் வலியுறுத்தும் வகையில் இலங்கைப் பிரதிநிதிகள் சபையில் அறிவித்திருக்கிறார்.

“மந்திரிகளின் அறிவிப்புத் தாள்களிலும், நிர்வாகத் துறை நிகழ்ச்சிகளுக்கான அறிவிப்புப் புத்தகங்களிலும் சிங்கள மொழியே அச்சிடப்படுவதைக் கண்டு தமிழ் உறுப்பினர்கள் யாரும் குழப்பம் அடையவேண்டியத் தேவையில்லை; இது மிகவும் சாதாரண சிறிய விஷயமாகும்” என்றும் அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்.

“தமிழ் உறுப்பினர்கள் யாரும் அமைச்சர்களாகக்கூடாது என்பதற்காகத்தான் சர்க்கார் இலாகாக்களிடையே நடைபெறும் போக்குவரத்துக்கள் அனைத்தும் சிங்கள மொழியில் அமைந்திருக்கிறது என்பதாகக் கூறப்படுகிறது; ஆனால், என்னைப் பொறுத்தவரையில், தமிழர் — சிங்களவரிடையே உள்ள தகராறுகள் அனைத்தையும் ஒருசேரக் கவனித்து முடிவு செய்யும் வகையில், தமிழ் உறுப்பினர்களும் எனது மந்திரி சபையில இடம் பெறுவதை நான் மிகவும் விரும்புகிறேன் என்பதைத் தமிழ் நண்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்” என்றும் அவர் குறிப்பிட்டாராம்.

இலங்கைப் பெடரேஷன் கட்சித் தலைவர் திரு. வன்னியசிங்கம் அவர்கள், ‘அமைச்சரவைக் காரியாலய நிகழ்ச்சிகள், செய்திகள் அனைத்தும் இனிமேல் சிங்கள மொழியிலேயே அச்சிடப்பட வேண்டும் என்று பிரதமர் உத்திரவிட்டிருப்பதானது, சிங்கள மொழியில் திறமையற்றத் தமிழர்கள் மந்திரி சபையில் இடம் பெறக் கூடாது என்பதற்காகச் செய்யப்படும் ஒரு ஏற்பாடாகும்’ என்று குறிப்பிட்டபோதுதான், மேற்கண்டவாறு பதிலளித்த பிரதமர் பண்டாரநாயகா, மேலும், இந்தப் பிரச்சினையில் தாம் ஏற்கனவே சிறுபான்மையினருக்கு அளித்துள்ள வாக்குறுதியை மீண்டும் உறுதி செய்வதாகவும், இந்த ஏற்பாடு, அமைச்சரவையில் தமிழர்கள் யாரும் நுழைந்துவிடக் கூடாது என்பதற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடாகாது என்றும், தமிழ் நண்பர்கள் இந்தச் சின்னஞ்சிறு விஷயங்களையெல்லாம் பெரிதாக்கிக்கொள்ள வேண்டாமென்று தாம் வேண்டிக் கொள்வதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆளும் கட்சியின் போக்குக்கு கண்டனம்

எதிர்க்கட்சியினர் கருத்துக்களை மதிப்பதில்லையென எடுத்துகாட்டு

அண்ணாமலைநகர், செப். 20—

“ஆளும் கட்சிக்கு மிகுதியான பெரும்பான்மை இருப்பதால், அவர்களது கருத்துக்களை விட்டுக் கொடுப்பதில்லை.

“எதிர்க்கட்சிகளின் கருத்தை அவர்கள் மதிப்பதில்லை; இதனால் சட்டசபைகளின் முக்கியத்துவம் குறைந்துவிடுகிறது.

“அமெரிக்காவிலுள்ளதை போல நமது நாட்டிலும் பல மாநிலங்களையுடைய மத்திய கூட்டாட்சி அமைத்துள்ளோம். ஆனால் அமெரிக்காவின் அரசாங்க அமைப்பை நாம் பின்பற்றவில்லை; இங்கிலாந்து பாராளுமன்ற நடைமுறையைப் பின்பற்றுகிறோம்”

என்று சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு. இராசகோபாலன், அண்ணாமலை பல்கலைக் கழகத்தில், அண்ணாமலை செட்டியார் பிறந்த நாள் - விழாவில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், சமூக நல ஆட்சியைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள இந்த ஆட்சியில், அரசாங்கம் பிறப்பிக்கும் சட்டங்களுக்கு மற்ற நாடுகளில் உள்ளதுபோன்று மக்கள் மரியாதை இருக்கவேண்டுமென்றும், ஆனால் அந்த நிலை இந்தியாவில் இல்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கவர்னர் சொல்லும் கதை கேளீர்!

சென்னை, செப். 20—

அகில இந்திய மீன் பிடிப்பு மாநாட்டை கவர்னர் பிரகாசா துவக்கிவைக்கையில் ‘கதை’ ஒன்று சொன்னார்:—

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஆராய்ச்சி நிலையத்தின் தலைமைப் பதவிக்கு ஒரு பெண்மணியின் தகுதியையும், திறமையையும் கண்டறிந்து, தேர்வுக் குழுவினர் தேர்ந்தெடுத்தனர்; தேர்வுக் குழுவில் அங்கம் வகித்த ஒருவர் கடைசியாக அந்தப் பெண்மணியிடம், ‘உணவுப் பொருள்களில் மிகவும் சத்துள்ளது எது?’ என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண்மணி மீன்’ என்று கூறினார்! இதைக் கேட்டவுடன், குழுவின் மற்றொரு உறுப்பினராக இருந்த காலஞ்சென்ற என். கோபாலசாமி அய்யங்கார், ‘சே! அபத்தம்!’ என்று தம்மையும் அறியாமல் உரக்கக் கூறினார். பிறகு அவர் அப்பதவிக்கு அப்பெண்மணியைத் தேர்ந்தெடுப்பதை ஆட்சேபித்து வெற்றியும்பெற்றார்; இறுதியில் அப்பெண் மணிக்கு அப்பதவி கிடைக்காமலே போய்விட்டது.

இந்த நிகழ்ச்சியை, மாமிச உணவை உட்கொள்ளாதவர்கள் ஒரு தனிவகுப்பாராகவே ஆகிவிட்டார்கள் என்பதை எடுத்துக் காட்டவே அதே குழுவில் அப்போதைய மத்திய சட்டசபையின் பிரதிநிதியாக இருந்ததையொட்டிப் பிரகாசா அவர்கள் கூறியுள்ளார்.

செருப்பு தைப்பவர்களுக்கு வேலையளிக்க ஏற்பாடு

சென்னை, செப் 24—

செருப்புத் தைப்பவர்களிடையே பெரிய அளவில் வேலையில்லாமல் இருக்கிறவர்களுக்கும் முழு அளவு வேலை கிடைக்காதவர்களுக்கும் வேலை கிடைக்கும்படி செய்வதற்காக மாகாணத்தில் 3 இடங்களில் தோல் மிதியடிகள் பயிற்சி உற்பத்தி நிலையங்களை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் அனுமதியளித்திருக்கிறது.

இந்தப் பயிற்சி உற்பத்தி நிலையங்கள் செங்கற்பட்டு, மதுரை, சேலம் மாவட்டங்களில் ரூ. 1,26,000 செலவில் ஏற்படுத்தப்படும். இவைகளுக்காக ரூ.5,67,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு நிலையத்திலும் ஓராண்டு காலத்திற்கு 12 பேர்களுக்குப் பயிற்சி அளிக்க இதன் மூலம் வசதி ஏற்படுகிறது.

வெறும் புகழ்ச்சியால்!

தமிழர்களை ஏமாற்றிவிட முடியாதே

சேலம், செப். 20—

"எப்பொழுதும் சென்னைதான் நாட்டிற்கு வேகத்தை அளித்து வருகிறது; சுதந்திரப் போராட்டக் காலத்திலிருந்தே தமிழ் நாடு தேச பக்தி நிறைந்த நாடாக இருந்து வந்திருக்கிறது; இப்பொழுதும் அது வழிகாட்ட வேண்டும்"

என்று இந்திய அரசாங்க கனரகத் தொழில் இலாகா அமைச்சர் மனுபாய் ஷா குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில் ஒழுக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தி இந்திய கைத்தொழிலுக்கு சென்னை மகத்தான வழிகாட்டியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டாராம்.

இந்திய அரசாங்கம் தென் இந்தியாவைப் புறக்கணிக்கவில்லை என்றும் இந்தப் பரந்த உபகண்டத்தில் மக்களைப் பிரிக்க, தொழிற்சாலைகள் அமைக்கும் இடம் காரணமாக இருக்கக் கூடாது என்றும் கூறினாராம்;

அவை எந்தப் பகுதியில் அமைக்கப்பட்டாலும் நாடு முழுவதும் தான் வறுமை இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாதாம்!

பொதுத் தேர்தல் ஒத்திவைப்பு?

இல்லையென உறுதியளிக்கிறார் நிதி அமைச்சர்

சென்னை, செப். 21—

வருகிற 1957-ம் ஆண்டு பிப்ரவரியில் நடைபெற வேண்டிய பொதுத் தேர்தல் மேலும் ஒரு வருட காலத்திற்கு ஒத்திப்போடப் படமாட்டாது என்றும், ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளபடி, அந்தக் காலத்தில் தேர்தல் நடைபெறுவதற்காக வேண்டியதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும் என்றும் நிதிஅமைச்சர் சுப்பிரமணியம் மாநில சட்டசபையில் அறிவித்திருக்கிறார்.

'வருகிற பொதுத் தேர்தல், சூயஸ் கால்வாய் நிலையைப் பொறுத்து நடைபெறுமா?' என்று உறுப்பினர் ஒருவர் கேட்டபோது, அமைச்சர், தாம் ஒன்றும் சாத்திர நிபுணர் அல்ல என்று மொழிந்தாராம்!

மேலும் ஓராண்டுக்குப் பொதுத் தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடமிருந்து தாக்கீது ஒன்றும் இல்லை என்றும், இது குறித்து சென்னை சர்க்காரின் கருத்தென்ன என்று மத்திய சர்க்கார் கேட்கவில்லை என்று அவர் அறிவித்திருக்கிறார்.

'சுலோ'கத்தை 'ராக'மாகப் பாடினர்!

சென்னை, செப். 22—

'சட்டசபையில் பாடலாமா?' என்பது விவாதத்திற்குரிய பிரச்சினையாகிவிட்டது.

மலையாள உறுப்பினரொருவர் சபையில் பாடியபோது காங்கிரஸ் உறுப்பினரொருவர் இந்த ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பினார்.

'அவர் பாடவில்லை; ஒரு 'சுலோக'த்தை 'இராக'மாகச் சொன்னார் என்று சட்டசபைத் தலைவர் பதிலிறுத்தார்.

'ஒரு பெண்ணை ஒரு ஆண் முத்தமிடுவது ஆபாசமான செய்கை என்று கூறமுடியாது" என்று கூறி, பொதுப் பூங்கா ஒன்றில் பெண்ணை முத்தமிட்டதற்காக மாஜிஸ்திரேட் விதித்த தண்டனையை ரத்து செய்து, பம்பாய் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நிகோசியா, செப். 21—

இன்று அதிகாலையில், இங்குள்ள சிறைச்சாலையில், சைப்பிரஸ் விடுதலைக் கிளர்ச்சியையொட்டி நடைபெற்ற வன்முறை நிகழ்ச்சிகளின் விளைவாக சைப்பிரசுக்காரர்களான மூவர்மீது விதிக்கப்பட்ட மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுவிட்டதாம்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

திராவிட நாடு விடுதலை நாள் நிகழ்ச்சிகள்

★

போத்தனூர் (கோவை):

15—9—56 மாலை 7 மணியளவில், பஞ்சாயத்து அலுவலகத் திடலில், தோழர் கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சிவலிங்கம் சிறிது நேரம் பேசியபின், பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், திராவிட நாடு தனி உரிமை பெறவேண்டியதன் அவசியத்தை விளக்கிப் பேசினார். பாண்டியனார் படிப்பகமும் கழகக் கிளையும் மாலை அணிவித்தன.

இராமநாதபுரம் (கோவை):

16—9—56 மாலை 7 மணியளவில், தோழர் மு. மா. சண்முக சுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் கோவைச் செழியன் கழக இலட்சியத்தைக் குறித்துப் பேசினார். பின்னர் க. அன்பழகனார், தி. மு. கழகம் இதுகாறும் செய்துவந்துள்ள பணிகளை விளக்கியதோடு, தேர்தலில் ஈடுபடுவதன் அவசியத்தையும், பொதுமக்களின் கடமையையும் புலப்படுத்திப் பேசினார். பேராசிரியருக்குக் கைத்தறி துண்டு அணிவிக்கப்பட்டது.

திருச்சி (வரகனேரி):

17—9—56 மாலை 6½ மணிக்கு, தோழர் வி. கே. எம். சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். அருணாசலம், எம். எஸ். மணி, அம்பில்-தர்மலிங்கம் ஆகியோர் பேசிய பின் பெருமழை பிடித்துக்கொண்டதின் காரணமாகக் கூட்டம் தொடர்ந்து நடைபெறாததால் தோழர் அன்பழகன் அவர்கள் பேசமுடியாமல் மற்றொரு முறை வருவதாகக் கூறி விடை பெற்றார்.

கலைக் கல்லூரியில்

13—9—56 மாலை சென்னை கலைக் கல்லூரி சீதக்காதி தமிழ்ச் சங்கத்தின் சார்பில், பாரதி விழா, கல்லூரிப் பேராசிரியர் திரு. பெருமாள் தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் பாரதியாரின் மொழிப் பற்றையும் நாட்டுப் பற்றையும் விளக்கிப் பேசினார். இறுதியில் கல்லூரி மாணவர்கள் 'வீரத்தமிழர் வ. உ. சி.' அவர்களின் வாழ்க்கையை தோழர் அன்பழகன் முன்னிலையில் வில்லுப்பாட்டு மூலம் விளக்கிப் பாடினர்.

சென்னை-மாணவர் மன்றம்

வெள்ளி விழா உறுப்பினர் பொதுக்கூட்டம்

16—9—56 மாலை மேற்படி கூட்டம் சென்னை இரத்தின முதலி தெரு, 17-ம் எண் இல்லத்தில், திரு. வல்லை-பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. பேராசிரியர் மயிலை சிவ-முத்து அனைவரையும் வரவேற்றார்.

மாணவர் மன்ற வெள்ளி விழாவினை ஜனவரி மாதம் மூன்று நாட்கள் சிறப்பாக நடத்த வேண்டுமென்றும், அப்போது தமிழ் அறிஞர்கள், பேராசிரியர்கள் உருவப் படங்களைத் திறந்து சிறப்பிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. வெள்ளி விழா மலர் ஒன்று சிறந்த முறையில் வெளிவர ஆவன செய்யவும், நிதி திரட்டுதற்கு ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

பலர் பேசிய பின்னர், சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார், டாக்டர் குருசாமி மனைவியார் ஆகியவர்கள் மறைவுக்கு வருந்தி, இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

திருமணம்

திருச்சி உறந்தைத் தோழர் நடராசன்—தோழியர் முத்துஇலக்குமி திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

தென்னாட்டில் இடம் தேடப்படுகிறதாம்!

கல்கத்தா, செப். 22—

மோட்டார் டயர், சைகிள் டயர் இவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைப்பதற்குத் தக்கதோர் இடம் தென்னாட்டில் தேடப்பட்டு வருகிறதாம்!

இந்தத் தொழிற்சாலை அமைக்கப்பட்டவுடன் 1958-ல் டயர்கள் உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்படுமாம்.

சௌந்திரபாண்டியனார் பிறந்த நாள் விழா

18-9-56 மாலை 7 மணிக்கு பம்பாய்—தாராவி 'அன்பகத்தில்' பாண்டியனார் பிறந்தநாள் விழா தோழர் மா. இரா. ஏ. இரத்தினசாமி தலைமையில் நடைபெற்றது.

பாண்டியனாரின் திருவுருவப் படத்தை தோழர் சா தர்மராசன் திறந்துவைத்தார்; தோழர்கள் பி. சாமிநாதன், யோ. தர்மராசன், எம். தர்மலிங்கம், திரு. சந்திரசேக பாவலர், டி. வி. துரை, கலைமோகன் ஆகியோர் பகுத்தறிவுக் கொள்கையைப் பரப்பப் பாண்டியனார் செய்தசேவைகள் பற்றிப்பேசினர்.

குறள் வகுப்பு

16-9-56 பிற்பகல் 3 மணிக்கு ஆமதாபாத்—நரோடா 3-வது கிளைக் கழகப் பணிமனையில் குறள் வகுப்புத் துவக்க விழா திரு. நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது; தோழர் வைத்தியநாதன் குறள் வகுப்பைத் துவக்கிவைத்துப் பேசினார். பின்னர் தோழர்கள் இரா. நடராசன், இரா புஷ்பநாதன் பேசியபின், தோழர் பி. கோ. கோவிந்தராசன் விரிவுரையாற்றினார்.

பாரதி விழா

19-9-56 மாலை 4 மணியளவில் பட்டுக்கோட்டை உயர்நிலைப்பள்ளியில் பாரதி விழா திரு எம். சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் என் எஸ். இளங்கோ அவர்கள் 'பாரதியின் வாழ்வும் வாக்கும்' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்; திரு. எஸ். பஞ்சாதம் அனைவரையும் வரவேற்றார்; புலவர் க. சுப்பிரமணியம் நன்றி நவின்றார்.

திருமணங்கள்

7—9—56 காலை 9 மணியளவில் விருத்தாசலம் வட்டம் சின்னப்பரூர் கிராமத்தில் தோழர் என். பூமாலை தலைமையில் தோழர் டி. பி. இராமசாமி—தோழியர் சிவமாலை திருமணம் நடைபெற்றது. தோழர் க. இராமதாசு வாழ்த்துரை வழங்கினார். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

சென்னை மூலக்கொத்தலம் பி. சுப்பராயன் பாடசாலையில், தோழர் அப்பாதுரை தலைமையில் தோழர் வி. செ. சுப்பிரமணி—தோழியர் பொன்னம்மாள் திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி தோழியர் அலமேலு-அப்பாதுரை, தோழர்கள் வ. கே வில்வம், எஸ் எஸ். தென்னரசு, டி. பி. போசேந்திரன் ஆகியோர் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடைது தரப்பட்ட—வரப்பெற்றோம்— நன்றி — பொறுப்பாளர்.

* * *

குன்னத்தூர் தொட்டிப்பாளையம் தோழர் கே. எஸ். பழனியப்பன்—தோழியர் டி. வ. சுப்பு இலக்குமி திருமணம் 9—9—56ல் நடைபெற்றது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி — பொறுப்பாளர்.

கழகச் செய்திகள்

மாத்தூரில் தி. மு. கழகத் துவக்கம்

19—9—56 மாலை 6 மணிக்கு, கள்ளக்குறிச்சி வட்டம் மாத்தூரில், தோழர் கோ. மாரியப்பன் தலைமையில் தி. மு. கழகம் துவக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: மா. இராமசாமி; துணைச்செயலாளர்: அ. நா. சீ. வாசன்; பொருளாளர்: மு இராமசாமி; மாவட்டப் பிரதிநிதி: மா. இராமசாமி. செயற்குழு உறுப்பினர்களாக ஆறு பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

எடுத்தவாய்நத்தம் தி. மு. கழகத் துவக்கம்

20—9—56ல், தோழர் கோ. மாரியப்பன் தலைமையில் மேற்படி கழகத் துவக்கம் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: மு கோவிந்தராசு; துணைச்செயலாளர்: அருணாசலம்; பொருளாளர்: பெ. சின்னதுரை; மாவட்டக் கழக உறுப்பினர்: ஆர். சின்னத்தம்பி; மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக 5 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரவாக்கோட்டையில் தி. மு. கழகம் அமைப்பு

17—9—56 இரவு 8 மணிக்கு, கிராம நல்வாழ்வு சங்கத்தில், மேற்படி அமைப்புக் கூட்டம் தோழர் கோ. சிவஞானம் தலைமையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: டி. பி. கந்தசாமி; துணைச் செயலாளர்: எம். சந்தானம்; மாவட்டப் பிரதிநிதி: கே. பி. பிச்சையன்; பொருளாளர்: க. இராமன்; செயற்குழு உறுப்பினர்கள்: கே. எஸ். தம்பையன், கோவி. துரை, க. சி. வீராசாமி, கே சிதம்பரம், வி. ஜி. இரத்தினம், அ. வ. தனபாலன், என். ஞானம்.

நரோடா—ஆமதாபாத் தி. மு. கழகம்

16—9—56 காலை 10 மணிக்கு, 3-வது வட்ட கிளைகழகப் பணிமனையில் தோழர் இரா. நடராசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் துணைச்செயலாளர் விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டும், குறள் வகுப்பு ஒன்றைக் கழகச் சார்பில் துவக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டதுடன் மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் பற்றி முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பீளமேடு தி. மு. கழகம்

19—9—56ல் கழகக் கட்டிடத்தில் தோழர் இரா. சந்திரன் தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: வ. கி. சேநாபதி; துணைச்செயலாளர்: ஜி. நாராயணசாமி; பொருளாளர்: பி. கோவிந்தராசு; மாவட்டப் பிரதிநிதி: பி. எஸ். வெங்கடேசன். மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மகளிர் மன்றம் செயற்குழுக் கூட்டம்

20—9—56 மாலை 6 மணிக்கு, 179, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில், தோழியர் சத்தியவாணி-முத்து அவர்கள் தலைமையில், மகளிர் மன்றச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றது.

கீழ்க்கண்ட செயற் குழு உறுப்பினர்கள் வந்திருந்தனர்:—

தோழியர்கள்: சத்தியவாணி-முத்து, அ. வெற்றிச்செல்வி-அன்பழகன், புவனேசுவரி-நடராசன், எஸ். பி. பேச்சியம்மாள், ஜெகஜோதி-நாகராசன், எஸ் கிருஷ்ணவேணி, கே. வெற்றிச்செல்வி, மு. ரா. திராவிடச்செல்வி, இராசம்மாள், கமலா-பாலசுந்தரம், எஸ். கலைச்செல்வி, இராணி-கலைச்செழியன், தனலட்சுமி, கே. சுந்தரம்மாள்-இளஞ்செழியன்.

அக்டோபர் திங்களில் மன்றத்தின் துவக்க விழாவை நடத்த வேண்டுமென்றும், அதற்குள் உறுப்பினர்களைச் சேர்க்கும் பணியில் மன்றம் தீவிரப் பங்குகொள்ள வேண்டுமென்றும், பெண்கள் அனைவரையும் வாக்காளர்களாகப் பதிவு செய்ய வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது.

அமெரிக்காவிலும் மக்கள் தொகை அதிகரிக்கிறதாம்!

இவ்வாண்டு ஆகஸ்டு மாதம் 1-ந் தேதி அமெரிக்காவின் மொத்த மக்கள் தொகை சுமார் 16,83,60,000 ஆக இருக்கிறதாம்!

1950 ஏப்ரல் 1-ந்தேதி இருந்ததைவிட இது 1,72,27,000 அதிகமாகுமெனமதிப்பிடப்படுகிறது

மாணவர் பார்லிமெண்டு திறப்பு விழா

16—9—56 காலை காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரித் தலைவர் திரு. ம. சண்முகசுந்தரனார் அவர்கள் தலைமையில் வாலாசாபாத் இந்துமத பாடசாலை வள்ளலார் இல்லத்தின் பார்லிமெண்டுத் திறப்பு விழா நடைபெற்றது. கூட்டத்தில் திரு. கோவை சி. எஸ். இரத்தினசபாபதியார் அவர்கள் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்றத் திறப்பு விழா காஞ்சிபுரம் நகராண்மைக் கழகத் தலைவர் வி. என். பெருமாள் அவர்களால் நடத்தப்பட்டது. மாணவர்கள் ஆட்சி செய்யும் திறமையைப் பெறுவது மிகவும் நல்லது என அவர் கூறினார்.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையின் மாணவர்கள் ஆட்சி மன்றம் 16—9—56 அன்று திறந்துவைக்கப்பட்டபோது எடுத்த படம்; காஞ்சீபுரம் சேர்மன் திரு. பெருமாள், பச்சையப்பன் கல்லூரி தலைவர் ம. சண்முகசுந்தரனார் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றார்கள்.

சென்னைக்குக் கிடைத்தது எவ்வளவு தெரியுமா?

புதுடில்லி, செப். 24—

குறைந்த வருமானத் தொகுதியினருக்கான குடியிருப்பு வசதித் திட்டத்தின் கீழ் இந்திய சர்க்கார் 1956 ஜூலை மாதத்தில் மூன்று மாநில சர்க்கார்களுக்கு மொத்தம் ரூ. 28,79,000 வழங்கியுள்ளனர்.

இத்தொகையில் சென்னைக்கு ரூ. 8 இலட்சமும், டில்லிக்கு ரூ. 17,34,000-மும், சௌராட்டிராவுக்கு ரூ. 3,45,000-மும் கிடைத்தன.

கடன் தொகைகள் வழங்குவதற்காக 1956—57-ம், ஆண்டிற்கு மொத்தம் ரூ. 720 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதில் 1956 ஜூலை 31-ந் தேதிவரையில் மொத்தம் ரூ 83,53,000 விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

ரூ. 4-கோடி செலவில் 100 கலங்கரை விளக்குகள்

புதுடில்லி, செப். 24—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இதுவரையில் 40 கலங்கரை விளக்குகளின் அமைப்புகள் பழுது பார்க்கப்பட்டனவாம்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் 100 கலங்கரை விளக்குகள் அமைக்க ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டு, தேவையான உபகரணங்களை பிரான்சு, சுவீடன், இங்கிலாந்து போன்ற நாடுகளிலிருந்து பெறுவதற்கு இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளதாம்.

சென்னைக்குக் கைத்தொழில் நிலயம்?

புதுடில்லி, செப். 22—

சென்னை, பம்பாய், டில்லி, கல்கத்தா ஆகிய நான்கு இடங்களில் கைத்தொழில் நிலயங்களை நிறுவ இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஒவ்வொன்றிற்கும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் மூலதனம் ரூ. 10-இலட்சமாகும்.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலையா?

தொழில் அதிபர் ஒருவர் நடவடிக்கை எடுக்கிறார்?

சேலம், செப் 24—

சேலத்தில் ஒரு தொழிலதிபர் ஆண்டு ஒன்றுக்கு 20 முதல் 30 ஆயிரம் டன் வார்ப்பு இரும்பு தயாரிக்கக்கூடிய அளவில் உலைகளைக் கொண்ட இரும்புத் தொழிற்சாலை ஒன்றை நிறுவ நடவடிக்கைகள் எடுத்துவருகிறாராம்!

நெய்வேலி நிலக்கரியும், சேலம் இரும்புத் தாதுப் பொருளும் இங்கு வார்ப்பு இரும்பு தயாரிப்பதற்குப் பயன்படும்.

ரூ. 23 கோடி செலவில் வெடிமருந்துசாலையாம்

நாகபுரி, செப். 21—

வெயன் கங்கா நதி பாயும் பிரதேசத்திலும், அம்போரா கிராமத்திற்கு 5 மைல் தூரத்திலுமுள்ள பகுதியை வெடி மருந்துச்சாலை அமைப்பதற்காக நிர்ணயித்திருக்கின்றனராம். இதற்காக இந்திய அரசாங்கம் ரூ. 23 கோடி ஒதுக்கியிருப்பதாகவும் தெரியவருகிறது. நவம்பர் முதல் தேதி உருவாகும் புதிய பம்பாய் மாநில அரசாங்கம் இதற்கான திட்டத்தைத் தயாரிக்கும் என்று கூறப்படுகிறது.

திடீர் அக்கரை பிறந்துவிட்டது!

ஜெய்ப்பூர், செப். 20—

வரும் பொதுத் தேர்தலில் மாநிலங்களின் சட்டசபைக்கு 15 சதவீதம் பெண்களுக்கும், மைனாரிட்டிகளுக்கும் ஒதுக்கப்பட வேண்டுமென்று காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்துள்ளதாகக் காங்கிரஸ் பொதுக்காரியதரிசி ஸ்ரீமந்நாராயண் நிருபர்களுக்கு அறிவித்துள்ளார்.

சென்னை—கிண்டியில் தொழிற்பண்ணை

நோக்கங்கள் பற்றி விளக்கம்

ரூ 1 இலட்சம் மூலதனத்தில் கிண்டியில் சிறிய தொழிற்சாலைகளுக்கான மூலப் பொருள்களை வாங்கி விநியோகிக்கும் தொழிற்பண்ணையொன்றை நிறுவ மாநில அரசாங்கம் அனுமதித்துள்ளது.

ஆண்டுதோறும் ரூ. 10½ இலட்சம் வரவு-செலவில் மொத்தமாக மூலப்பொருள்களை வாங்கி இத்தொழிற் பண்ணையின் கீழ் தொடங்கப்படும் சிறிய பல தொழிற்சாலைகளுக்கு வேண்டும் போது வழங்குவது இதன் வேலையாகும். இந்த தொழிற் பண்ணைக்கான நிலங்களைச் 'சார்வு' செய்து கட்டிடங்களைக் கட்ட அரசாங்கம் முயற்சிகள் தொடங்கிவிட்டது.

நல்ல தரமுள்ள மூலப்பொருள்கள் எந்தக் காலத்திலும் முட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்யவே இது தொடங்கப்படுவதன் நோக்கம். இந்தத் தொழிற்பண்ணைத் திட்டத்திற்கு இந்திய அரசாங்கம் ரூ. 36,200 கடன் கொடுத்து உதவும்.

இரண சிகிச்சைக் கருவிகள் உற்பத்தி நிலயமொன்றும் கிண்டியில் நிறுவப்படுமென்று தெரிகிறது. ரூ 2 இலட்சம் செலவில் தோற்றுவிக்கப்படும் இந்த நிலயத்திற்கு நடைமுறைச் செலவு ரூ. 2,60,000 என்று திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

சொல் ஒன்று—செயல் வேறாக உள்ளதே!

"அடுத்த ஒருவரின் கருத்துக்களுக்கு மதிப்புத் தருவதும், சகித்துக்கொள்ளும் தன்மையுமே ஜனநாயகத்தில் இருந்தாகவேண்டிய முக்கிய அம்சங்களாகும்."

என்று, பம்பாய் மாநிலத் தொழில் துறை அமைச்சர் சாந்திலால் ஷா என்பார் கூறியுள்ளார்.

அண்ணா உருவப்படத் திறப்பு

26—9—56 மாலை 5-மணிக்கு, வேலூர் நகராட்சி அலுவலகத்தில்—'சிதம்பரம் பிள்ளை மண்டபத்'தில் அண்ணா அவர்களின் உருவப் படத்தைத் திரு. பி. டி. இராசன் அவர்கள் திறந்து வைப்பார். அவ்வமயம் அவருக்கு வேலூர் நகரமன்றச் சார்பில் நல்வரவேற்புரை வாசித்தளிக்கப்படும்.

கழகக் கூட்டங்கள்

★

தருமபுரி:

தீர்த்தகிரியார் மைதானத்தில்

26—9—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: பி. எம். குப்புசாமி

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

எம்.பி. சுப்பிரமணியம் M.L.A.

★

காக்கிவாடம்பட்டி:

(பூதிப்புரம் அருகில்)

கோடியேற்று விழா

26—9—56 மாலை 4 மணிக்கு

தலைவர்: மு. ஆங்கன்

பேசுவோர்:

எஸ். முத்து எம்.சி.

பி. சமதர்மம், முகதா

என். இராமசாமி

★

பூதிப்புரம்:

(தேனிக்கு அருகில்)

மாவட்டக் கழக ஆரம்பப் பள்ளி முன்னிலையில்

தலைவர்: ஆர். தர்மராசன்

26—9—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:

எஸ். முத்து எம்.சி.

பி. சமதர்மம், முகதா

என். இராமசாமி

இராம-இராசன், பாலு

உலகிலேயே வேகமுள்ளதாம்!

1,26,000 அடி உயரத்தில் பறந்ததாம்!

வாஷிங்டன், செப். 21—

உலகத்திலேயே மிகவும் வேகமாகப் பறக்கும் விமானம் ஒன்றை 1,26,000 அடி உயரத்தில் அமெரிக்க விமானப் படையினர் பறக்கச் செய்து காட்டினராம்!

புதிய ரஷ்ய விமானம்

180 பேர்களுடன் 500-மைல் வேகத்தில் செல்லுமாம்

மாஸ்கோ, செப். 23—

180 பேர் உட்கார்ந்து செல்லக்கூடியதும், மணிக்கு 500 மைலுக்கு மேல் வேகமாகச் செல்லக்கூடியதுமான ஒரு புதியவிமானம் விரைவில் பறக்கவிடப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சுடப்பட்டார்!

வாஷிங்டன், செப் 22—

நடன விருந்தொன்றில் கலந்துகொண்டிருந்த நிகராகுவா அதிபரை யாரோ ஒருவன் மூன்று முறை சுட்டுவிட்டானாம்; அவர் படுகாயமுற்று கீழே விழுந்துவிட்டாராம்; மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறதாம்.

சுட்டவனை நடன விருந்தில் கூடியிருந்தவர்கள், அங்கேயே அடித்துக் கொன்று விட்டனராம்.

'காக்காய்'பிடிப்பதற்கு மாலை போட்டனராம்!

அமைச்சர் பக்தவத்சலம் கூறினாராம்!

கோவை, செப். 24—

வால்பாறையில் தென்னிந்தியத் தோட்டத்தொழிலாளர்மாநாட்டில் அமைச்சர் பக்தவத்சலத்திற்கு பலரக மலர்களால் கட்டப்பட்ட மாலைகள் போடப்பட்டதாம்.

அமைச்சர் பேசுகையில், முன்பெல்லாம் 'காக்காய்' பிடிப்பதற்கு மாலை போட்டனர்; சுதந்திர இந்தியாவில் காக்காய் பிடிக்க வேண்டியதில்லை' என்று கூறியதாகப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் காணப்படுகிறது.

சாமியின் சவ அடக்கத்தில் பொதுச்செயலாளர்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பிணைகளை நமக்குக் கற்றுக்கொடுக்கின்றது. அவற்றை அறிந்து கொள்ளும் வகையில் வீரவணக்கம்—இறுதி வணக்கம் செலுத்தவே நாம் கூடியிருக்கிறோம்.

"அரசியல் உலகில் நடமாடும் மிருகவுணர்ச்சி கொண்ட கயவர்களுக்கு உலக உத்தமரான காந்தியாரின் சாவே இறுதி காணிக்கையாக அமைந்துவிடும்—இனி அவ்விதக் கயவர்கள் நடமாட இடமிருக்காது—காந்தியாரின் சாவைப் பார்த்த பிறகு அப்படிப்பட்ட விலங்கு மாக்கள் மனிதர்களாக மாறிவிடுவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் தோழர் சாமியின் படுகொலையைக் காணும்போது, அப்படிப்பட்ட கயவர்கள் இன்னமும் உலாவிக் கொண்டிருக்கிறார்கள் என்றே தெரிகிறது. அப்படிப்பட்ட கயவர்களுக்குத் தோழர் சாமி அவர்கள் தம்முடைய சாவாவது இறுதிக் காணிக்கையாக இருக்கட்டும் என்று அறிவுரை கூறுவதுபோல்தான், தோழர் சாமி அவர்கள் பிணக்கோலத்தில் நம்முன் காட்சியளிக்கிறார். தோழர் கே. வி. கே. சாமி அவர்களின் பிரிவால் ஏற்பட்ட அதிர்ச்சி இங்குள்ள சிலரின் உள்ளத்தில் பதுங்கிக்கிடக்கும் மிருகவுணர்ச்சியை விரட்டட்டும்; நாகரீகத் தன்மையையும், பண்பாட்டுணர்வையும் வளர்க்கட்டும்; பொது வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள செயல்வீரர்களுக்குப் புதியதொரு ஊக்கத்தையும், உணர்ச்சியையும் ஊட்டட்டும்!

"திருநெல்வேலி மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இலட்சியக் கீதத்தை எழுப்பிக்கொண்டிருந்த வீணையின் நரம்பு திடீரென்று அறுக்கப்பட்டுவிட்டது; பலருக்கும் பயன்படும் வகையில் குலுங்கும் பழங்களைக்கொண்டிருந்த கனிமரம் வேரோடு சாய்க்கப்பட்டுவிட்டது; கழகத் தோழர்களுக்கு வழிகாட்டிச் சென்ற சுடர்விளக்கு திடீரென்று அணைந்துவிட்டது! அந்தோ கொடுமை! கொடுமை!

"வீரம், விடாமுயற்சி, உணர்ச்சி, ஊக்கம், செயலாற்றும் திறன், எடுத்தசெயலை முடிக்கும் தன்மை, அஞ்சாமை, துணிவுடைமை, பழகும் பண்பாடு, தொண்டாற்றும் தன்மை, பொதுநல நோக்கு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற பல்வேறு நற்பண்புகளுக்கு உறைவிடமாக விளங்கிய ஒரு பெரும் வீரர்தான் தோழர் சாமி அவர்கள். அவரது மறைவால் ஏற்படும் இழப்பை வேறு ஒருவரால் ஈடுசெய்வது [illegible] செயலல்ல! இயலவே [illegible]. தோழர் சாமி அவர்கள் மறைந்துவிட்டாலும், அவரது பெயரும், புகழும், பண்புகளும் நமக்கு [illegible]களாகவும், வழிகாட்டிகளாகவும், [illegible] என்றென்றும் நின்று நிலவும். அவைகளைப் பயன்படுத்திக்கொண்டு நாம் அனைவரும் பலராக நின்றேனும், தோழர் சாமியின் பிரிவால் ஏற்படும் இழப்பை இனி ஈடு செய்வோமாக! அவர் கனவு கண்டு கொண்டிருந்த இலட்சியத்தை நனவு ஆக்குவோமாக! அவர் விட்டுச்சென்ற செயலைத் தொடர்ந்து செய்து முடிப்போமாக!

"கோழைகள் பல தடவை செத்துச்செத்துப் பிழைத்துப் பின் மடிவர்; ஆனால் வீரன் ஒரே ஒரு தடவைதான் செத்து மடிவான்; அதுதான் அவனது இறுதியான சாவு! அப்படிப்பட்ட வீரச் சாவைத்தான் தோழர் சாமி அவர்கள் அணைத்துக்கொண்டு விட்டார்கள்.

"உலகப் பெரியார்களான சாக்ரடீஸ், இயேசு, புருனோ, ஆப்ரகாம்லிங்கன், காந்தியார் ஆகியவர்கள் காட்டிய புகழ்ப்பாதையிலே தோழர் கே. வி. கே. சாமி அவர்களும் வீரநடைபோட்டுச் சென்றுவிட்டார். திராவிடத்தின் விடுதலைக்காகப் போராடி வரும் திராவிட முன்னேற்ற கழகம், இப்படிப்பட்ட காணிக்கைகளைச் செலுத்த வேண்டிதான் நேரிடும். தோழர்கள் தாளமுத்து, நடராசன், உடையார்பாளையம் வேலாயுதம், நெல்லிகுப்பம் மஜீது, சென்னை கே எஸ். பாண்டியன் ஆகியவர்களை இதற்கு முன் நாம் காணிக்கையாகச் செலுத்தியிருக்கிறோம்; இப்பொழுது தோழர் சாமியைக் காணிக்கையாகச் செலுத்தித் தீரவேண்டிய நிலைமைக்கு உள்ளாக்கப்பட்டுவிட்டோம்!

"நாம்—தோழர் சாமி அவர்களின் கல்லறையின் முன்னால் நிற்கும் நாம், அவரது சடலத்தை அமைதியாகக் கல்லறையில் இறக்கிவிட்டு, விழிகளிலே வழியும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவரது உள்ளம், பெயர், புகழ் ஆகியவற்றை உறுதுணையாகக்கொண்டு நாம் மேலும் மேலும் கடமையாற்றி முன்னேறிச் செல்வோமாக! அந்த வகையில் தோழர் கே. வி. கே. சாமி அவர்களுக்கு இறுதி வணக்கம் செலுத்துவோமாக!

"வாழ்க சாமியின் பெயர்! வளர்க அவரது புகழ்! வெல்க அவரது தொண்டு!"

வெள்ளவேடு கிராமத்தில் தி. மு. க. துவக்கவிழா

26—9—56 மாலை 6-மணிக்கு, திருமழிசையை அடுத்த வெள்ளவேடு கிராமத்தில், ஆற்று மணல் திடலில், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் டி. என். சம்பந்தம் அவர்கள் தலைமையில், மேற்படி கழகத் துவக்கவிழாவும் திராவிட நாடு விடுதலை நாள் விழாவும் நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, சி. வி. எம். அண்ணாமலை, டி. கே. பொருரான் ஆகியோர் பேசுவர்.

அ. கொல்லப்பட்டி-புதூர் தி. மு. கழகக் கட்டிடத் திறப்புவிழா

26—9—56 காலை 10-மணிக்கு, தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் மேற்படி கட்டிடத் திறப்புவிழா நடைபெறும்; தோழர் பி. எம். குப்புசாமி அவர்கள் கொடியேற்றி வைப்பார்; தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கட்டிடத்தைத் திறந்துவைத்துச் சொற்பொழிவாற்றுவார்.

சீனவுக்கு 1,000 இந்திய அருமைகள்!

புதுடில்லி, செப் 22—

ஓராயிரம் எருமை மாடுகளை அனுப்பும்படி இந்தியாவிடம் சீனா கேட்டிருப்பதாக இந்திய உணவு விவசாய இலாகா அதிகாரி பாத்ரா தெரிவித்துள்ளார்.

தண்ணீரில் நனைந்தாலும் எரியும் தீக்குச்சி

ஹாங்காங், செப். 24—

மழையிலும், காற்றிலும் எரியக்கூடிய தீக்குச்சிகளை சீனா [illegible] செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது; காண்டன் நகரிலிருந்து இத்தகவல் கிடைத்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.